## லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாயக் கற்கைகள் நிறுவகம் - 2014

---

லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாயக் கற்கைகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 32 ஆம் இலக்க உபாயக் கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச்சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 இன் 45 ஆம் இலக்க உபாய கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாயக் கற்கைகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிலையத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 356,546 பெறுமதியான பெயர்ப் பலகையொன்று கொள்வனவு செய்யப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களுக்குரிய மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு பரீட்சை மீதியில் ரூபா 716,986 தொகையாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 841,793 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு செலவின விடயங்களுக்குரிய பேரேட்டின் மீதிகளுக்கும் நிதிச் செயலாற்றல் அறிக்கையின் மீதிகளுக்கும் இடையே ரூபா 269,136 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 32 ஆம் இலக்க உபாயக் கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 இன் 45 ஆம் இலக்க உபாய கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 10 உ(I) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டம் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து அமுலாகும் வரையில் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவனம் (பீஜடீரீஜ) லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் | இரண்டு உத்தியோகத்தர்களின் மீளாய்வாண்டின் யூன் முதல் திசெம்பர் மாதம் வரையிலும் ரூபா 43,368 கூட்டுத்தொகையான ஊழியர் சேமலாப பங்களிப்புத் தொகை முறைப்படி கழிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | நிர்ணயித்த திகதியில் பங்களிப்புத் தொகை அனுப்பிவைக்கப்படாததன் காரணமாக ரூபா 9,796 தொகையான மிகைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டம் | நிறுவகத்தின் 18 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டிற்காக பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | நிதிப்பிரமாணம் 212(2) | சம்பள முற்பணம் ஆகக் கூடியது 40 சதவீதத்திற்கு உட்பட்டு செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கையில் அதற்கு முரணாக நிறுவகத்தின் உத்தியோகத்தரொருவருக்கு சம்பள முற்பணமாக மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதத்தின் போதும் யூலை மாதத்தின் போதும் முறையே ஆரம்பச் சம்பளத்தில் 80 சதவீத்திலிருந்து 67 சதவீதமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள், பொது 287 மாதிரியில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றில் பதியப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,559,193 கூட்டுத் தொகையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு உரிய அமைச்சினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

#### 3.1.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 4,339,517 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,691,957 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,647,560 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா ரூபா 7,649,553 ஆல் அதிகரித்திருந்த போதிலும், பாடநெறிக் கட்டண வருமானம் ரூபா 6,795,414 ஆலும் ஏனைய வருமானம் ரூபா 3,501,700 ஆலும் அதிகரித்திருந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மனித உரிமைகள் பிரிவிற்காக மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் தற்காலிகமாக ஆட்சேர்க்கப்பட்டிருந்த 19 உத்தியோகத்தர்களுக்காக அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து நிறுவகத்திற்கு கிடைத்த சேவையை உறுதிப்படுத்தாமல் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது ரூபா 5,783,399 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நடைமுறைக் கோவையொன்று தயாரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது முற்பணமாக ரூபா 10,000 தொகை வெளிநபரொருவருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக மாத்திரம் உரிய நடைமுறைக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 10 மாதங்கள் தாமதித்து 2016 சனவரி 08 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5:1:2 ஆம் பிரிவின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்தமையால் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பாக செயலாற்றலுடன் ஒப்பிடுவதற்கு முடியாமல் இருந்தது.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தினால் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------------

உள்ளகக் கணக்காய்வுப் பிரவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சினாலும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் உச்ச இலக்கை அடைந்து கொள்வதற்கான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 ஆண்டறிக்கையை பகிரங்கப்படுத்துதல்

----------------------------------------------------------------------

2007 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பலவீனங்கள் அவ்வப்போது நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பராமரித்தல்
(ஆ) பொருட் பதிவேடுகளைப் பராமரித்தல்
(இ) மனிதவள முகாமைத்துவம்